service rendered by these unqualified Grade 1 Tamil Pandits before 1st June 1960 should be taken into account irrespective of the scales in which these Pandits drew pay before 1st June 1960.

The Government Orders are clear on the point that the service put in by the Tamil Pandits prior to 1st June 1960 should be counted for purposes of weightage in the revised scale of pay and the Director of Public Instruction has communicated those Orders to all the managements already. Individual cases where the Government Orders have not been implemented can be referred to the authorities of the Education Department, if need be, for redress. The closure of the financial year is no bar for payment of increment arrears.

As regards the non-implementation of the orders by the managements of the Kalyanasundaram High School, Thanjavur, National High School, Tiruchirappalli and St. Joseph's College High School, Tiruchirappalli, the Director of Public Instruction has received representations only from St. Joseph's College High School, Tiruchirappalli and he has issued suitable instructions to the correspondent of the school. No representation has been received by him from the other two schools.

V.—GOVERNMENT RESOLUTION

APPROVAL OF THE MUTHUCHIPPI PARKAL FISHING RULES, 1963.

THE HON. SRI N. S. S. MANRADIAR : Mr. Chairman, Sir, I move—

'That in pursuance of the proviso to sub-section (4) of section 6 of the Indian Fisheries Act, 1897 (Central Act IV of 1897), the House do resolve that the Muthuchippi Parkal Fishing Rules, 1963, be approved'.

MR. CHAIRMAN : Resolution moved—

'That in pursuance of the proviso to sub-section (4) of section 6 of the Indian Fisheries Act, 1897 (Central Act IV of 1897), the House do resolve that the Muthuchippi Parkal Fishing Rules, 1963, be approved'.

திரு. ஜே. பொன்னுசாமி வில்லவராயர் : தலைவர் அவர்களே, இந்த முத்துச் சிப்பி சட்டத்தைப் பற்றி எதிர்த்துப் பேசாவிட்டாலும் சில கருத்துக்களைச் சொல்ல ஆசைப்படுகிறேன். முத்துச் சிப்பியானது 19 பார்களில் இருப்பதாக அவர்கள் கணக்கிட்டிருக்கிறார்கள். இருந்தாலும் நான் அறிந்த மட்டில் 19-க்கு மேல் 40-45 பார்களில் இந்த முத்துச்சிப்பி இருக்கிறது. இந்தச் சட்டம் சென்ற பத்து ஆண்டுகளுக்கு முன்பு இயற்றியிருந்தார்கள். ஆனால் அந்தச் சட்டத்தில் சிலர் பிடிபட்டிருக்கிறார்கள் என்று நினைக்கிறேன். ஆனால் அவர்களைக் கோர்ட்டுக்குக் கொண்டுபோன

25th March 1963] [திரு. ஜே. பொன்னுசாமி வில்லவராயர்]

இடத்தில் அந்தச் சட்டம் செல்லாது, ஏனென்றால் இண்டர்நேஷனல் வாட்டர் அதாவது பொதுத் தண்ணீரில் அது இருக்கிறது, 12 மைலுக்கு அப்பால் 35 மைல் வரை இந்த முத்துச் சிப்பிப் பார்கள் இருக்கின்றன, ஆகையால் இதில் மீன் பிடிப்பது பொதுவான ஒரு காரியம் என்றார்கள். இந்தியர்கள் மட்டும் மீன் பிடிக்கவில்லை. ஜப்பானியர்கள், இன்னும் இலங்கையர்கள் எல்லோரும் மீன் பிடிக்கிறார்கள். இப்படி அவர்கள் மீன் பிடித்து வரும்போது இந்தியர்கள் மட்டும் ஏன் மீன் பிடிக்கக்கூடாது. பொதுத் தண்ணீரில் என்று ஒரு கேள்வி எழுந்ததாகவும், ஆகையால் இதை அவர்கள் வெளியிட்டதாகவும் நான் நினைக்கிறேன். அப்படி இருக்கும் பட்சத்தில் நமது மீன் இலாகா அமைச்சர் அவர்கள் சட்ட இலாகாவைக் கலந்து அதன் மேல் நல்ல ஒரு முடிவு எடுத்து ஏழை மீனவர்கள் பிடிக்கிற இடத்தில் ஒரு போயா என்று சொல்லப்படும் இலக்கு இடப்படவில்லை. எங்கு பிடித்தாலும் எந்த இடத்தில் பிடித்ததாகவும் யார் வேண்டுமானாலும் அவர் மேல் கேஸ் போடலாம், அல்லது தடுக்கலாம். ஆகையால் மீன் இலாகா அமைச்சர் அவர்கள் சட்ட இலாகாவை நன்றாக ஆராய்ந்து இதற்கு வேண்டியவற்றைச் செய்யும்படி கேட்டுக் கொண்டு நானும் அவர்களுக்குத் தனிப்பட்ட முறையில் என்னுடைய வேண்டுகோள்களையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : கனம் சேர்மென் அவர்களே, கனம் பொன்னுசாமி வில்லவராயர் அவர்கள் இரண்டு பிரச்னைகளை எழுப்பினார்கள். ஒன்று, இந்த விதிகள் 12 மைல் கடற்கரைக்கு அப்பால் இருக்கிற இடங்களுக்குப் பொதுக் கடல் என்ற இடங்களுக்குச் செல்லுபடியாகுமா, ஆகாதா, அந்த மாதிரி செல்லுபடியான திருத்தத்தை எப்படிக் கொண்டுவரலாமென்பது. இரண்டாவது, இதற்கு முன்பு இதே விதி கொண்டுவரப்பட்டு கோர்ட்டில் நிராகரிக்கப்பட்டது. இதில் இரண்டாவதுக்கு பதில் சொல்லுகிற முறையில் முதல் முதலில் விதிகள் தள்ளுபடி செய்வதற்குக் காரணம் அவை சரியான முறையில் பிரசுரிக்கப்படவில்லை. 1797-ம் வருஷத்திய சட்டத்தில் இந்த விதிகளை இந்தக் கவுன்சிலிலே கொண்டுவருவதற்கு முன்னால் பிரசுரம் செய்யவேண்டும், பிரசுரம் செய்து அதற்குப் பிறகு கவுன்சிலில் கொண்டுவந்து நிறைவேற்றவேண்டுமென்று இருந்தது. அதை அனுஷ்டிப்பதில் தவறு இருந்ததால் தள்ளுபடி செய்யப்பட்டது. அதை நிவர்த்திக்கும் முறையில் பிரசுரம் செய்து சட்ட சபையில் அதைக் கொண்டு வந்திருக்கிறோம். 12 மைலுக்கு அப்பால் இருக்கிற பகுதிகளுக்கு இந்தச் சட்டம் செல்லுபடியாகுமா என்பதைப்பற்றி நம்முடைய இந்தியக் குடியரசு ஒரு புரோக்ளமேஷன் செய்திருக்கிறது 1956-ம் வருஷத்திய புரொக்ளமேஷன் நெ. 3 என்ன சொல்கிறது என்றால்:

Whereas the coastal communities of India have from time immemorial been engaged in fishing activities in the high seas adjacent to the territorial waters,

[திரு. ஆர். வெங்கட்டராமன்] [25th March 1963

And, whereas certain areas of these high seas provide fisheries which contribute to the food and means of livelihood of large sections of the population and, consequently India has a special interest in maintaining the productivity of the living resources of all such areas,

Now, therefore, I, Rajendra Prasad, President of India do hereby proclaim and declare in the Seventh Year of the Republic as follows :

The Government of India may from time to time :

Establish in accordance with the laws enacted for the purpose, conservation zones in areas of high seas adjacent to the territorial waters of India within a distance of one hundred nautical miles from the outer limits of these waters.

ஆனால் இந்த விதிகளின்படி புரோக்ளமேஷன் டெரிடோரியல் வாட்டர் என்று சொல்லப்பட்டவைக்கு அப்பால் 100 மைல் வரையிலும் மீன் வளம் செய்வதற்கும் மீன் வளத்தைப் பாதுகாப்பதற்கும் கன்சர்வேஷன் செய்வதற்கும் விதிகள் பிறப்பிக்கலாம் என்று இருக்கிறது. அந்த மாதிரி விதி ஏற்படுத்தியதின் காரணமாக இந்தச் சட்டம் செல்லுபடியாகுமென்று தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ஜே. பொன்னுசாமி வில்லவராயர் : தலைவர் அவர்களே, அப்படிப் பிடிக்கும் பட்சத்தில் ஜப்பானியர்கள் வந்து 'டூனா' என்ற மீனைப் பிடித்துப் போவதையும் தடுத்து நிறுத்தினால் தவிர நல்ல மீன் வளம் தூத்துக்குடியைப் பொருத்தவரையில் கிடைக்காது என்பதைத் தெரிவித்துக்கொண்டு தயவு கூர்ந்து விதிகளை நல்ல முறையில் செய்யும்படி கேட்டுக்கொள்கிறேன்.

THE HON. SRI R. VENKATARAMAN : Mr. Chairman, Sir, the point is this. We can pass legislation in respect of our people and they are bound by the legislation passed provided it is within the competence of the Legislature. I pointed out that it is within our competence because the President has issued a proclamation. So far as the other people fishing in waters which are outside the territorial waters are concerned, we have no authority to control it. Actually there are a large number of international disputes now between England and Iceland and between Japan and other countries in respect of fishing rights in high seas. That is a matter which cannot be protected by our legislation.

MR. CHAIRMAN : The question is—

'That in pursuance of the proviso to sub-section (4) of Section 6 of the Indian Fisheries Act, 1897 (Central Act IV of 1897), the House do resolve that the Muthuchippi Parkal Fishing Rules, 1963 be approved '.

The resolution was put and carried.